வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No.: P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 16.09.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 259 பக்கங்கள் : 08

# மாகாணத் தேர்தல் தாமதமாக விகிதாசார முறையே காரணம்!

## யாழ். வந்த தேர்தல் ஆணையாளர் நாயகம் சுட்டிக்காட்டு

- த.பிரதீபன், பு.கஜிந்தன்-

யாழ்ப்பாணம், செப்ரெம்பர்16

**விருப்பு முறைமை வாக்களிப்பாக இருந்த மாகாண சபை முறை மையை விகிதாசார முறை மையாக்கத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டமையே தேர்தல் காலம் தாழ்த்திச் செல்லக் காரணம் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்சிறீ ரத்நாயக்க தெரிவித்தார்.**



நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த அவர் யாழ். ஊடகவியலாளர்களுடன் நடத்திய சந்திப்பின்போதே இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த சட்ட வரைமுறையால் எல்லை நிர்ணய வரையறைகள் சீர்திருத்தம் குறித்த பிரச்னை இருக்கின்றது.

இது தீர்க்கப்பட்டால் உடனடியாக தேர்தல் நடைபெறும். அதற்கு திணைக்களம் தயாராக இருக்கின்றது.

அல்லது குறித்த தீர்மானத்தை தற்போது பாராளுமன்றில் தனிநபர் பிரேரணையூடாக நிறைவேற்றி மீண்டும் பழைய முறைமையை நடைமுறைப் படுத்த பாராளுமன்றம் தீர்மானம்

07



## தியாகி திலீபனின் நினைவேந்தல் நல்லூரில் எழுச்சியுடன் ஆரம்பம்!

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 16

தியாக தீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் யாழ்ப்பாணம், நல்லூரில் நேற்று ஆரம்பமானது.

தமிழ் மக்களின் உரிமைக்காக 12 நாட்கள் உணவையும் நீரையும் ஒறுத்து உயிர்த் தியாகம் செய்த தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று ஆரம்பமானது.

நல்லூர் கந்தன் ஆலயம் அருகே அவர் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அஞ்சலி நடைபெற்று, தொடர்ந்து, நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் இடம்பெற்றது.

07

## சாவகச்சேரி நகர, பிரதேச சபைகளின் நீதிமன்ற தீர்ப்பு வந்ததும் நடவடிக்கை

யாழ்ப்பாணம், செப். 16

சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளின் நீதிமன்று தீர்ப்பு அதிகாரபூர்வமாக கிடைக்கவில்லை. கிடைத்ததும் நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில் -

சாவகச்சேரி நகர மற்றும் பிரதேச சபைகளின்

07

## போதை மாத்திரை, ஹெரோயினுடன் யாழ்ப்பாணத்தில் மூன்று பேர் கைது!

- பு.கஜிந்தன், த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 16

யாழ்ப்பாணம் - பொம்மைவெளி பகுதியில் 15 போதை மாத்திரைகள் மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோயின் போன்றவற்றுடன் 18,19 மற்றும் 21 வயதுடைய சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ்

07

## இரண்டாம் காலாண்டில் பொருளாதாரம் வளர்ச்சி!

கொழும்பு, செப். 16

2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் ஆண்டுக்கு ஆண்டு 4.9 வீத வளர்ச்சியடைந்துள்ளதாக புள்ளிவிவரவியல் திணைக்களத் தரவுகள் தெரிவிக்கின்றன .

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயத்தை தெரிவித்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான விலையில் 2025 ஆம் ஆண்டின்

07

## புதிய முயற்சியில் மகிந்த, நாமல்?



கொழும்பு, செப். 16

மஹிந்தவின் காற்றில் நாமலின் வாசம் என்ற தலைப்பில் ஒரு புதிய அரசியல் முயற்சி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பொதுஜன பெரமுன பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறிய பிறகு, முன்னாள்

07

# இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கலாசார சுற்றுலாவை மேம்படுத்தவேண்டும்!

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை



யாழ்ப்பாணம், செப். 16

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவு பழமையானது. அந்த ஆழமான தொடர்பை இராமாயணத்தை விட வேறு எந்தவொரு இதிகாசமும் தெளிவாக விளக்கவில்லை. இராமாயணத்துடன் தொடர்புடைய பல்வேறு இடங்கள் இன்றும் எங்கள் நிலத்தில் உள்ளன. இதனைப் பயன்படுத்தி கலாசார சுற்றுலாவை மேம்படுத்த வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகமும், இவன்ரோக் அமைப்பும்

07

## “மீண்டும் கொழும்பு வரும் தீர்மானமில்லை”

கொழும்பு, செப். 16

“தங்காலை கால்டன் இல்லத்தில் தற்போது தங்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, கொழும்பில் மீண்டும் குடியேறுவதற்கு இதுவரையில் தீர்மானம் எதையும் எடுக்கவில்லை.” என்று பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

07

## வறுமை காரணமாக சிறைகளுக்கு செல்வோரின் எண்ணிக்கை உயர்வு

கொழும்பு, செப். 16

வறுமை காரணமாக சிறைக்குச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

சர்வோதய மேம்பாட்டு நிதி நிறுவனத்தினால் நடத்தப்பட்ட 27 ஆவது தேசிய கைதிகள் தின நிகழ்வில் கலந்துகொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று சிறைகளில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

07

## சென்னை துணைத் தூதுவர் நியமனம் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை

கொழும்பு, செப். 16

சென்னைக்கான துணைத் தூதுவராக கேதீஸ்வரன் கணேசநாதன், நியமிக்கப்பட்டதில் எவ்வித அரசியல் தலையீடும் இல்லை என வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) ஆதரவாளரான கேதீஸ்வரன் கணேசநாதன், சென்னைக்கான இலங்கையின் துணை தூதுவராக அண்மையில் நியமிக்கப்பட்டார்.

எனினும் இது இராஜதந்திர வட்டாரங்கள் மற்றும் வெளிவிவகார அமைச்சினுள் குறிப்பிடத்தக்க

07

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயக தினத்தை முன்னிட்டு நெடுந்தீவில் 2நாள் வேலைத்திட்டம்

## யாழ்.வந்த தேர்தல் ஆணையாளர்

யாழ்ப்பாணம், செப். 16
சர்வதேச ஜனநாயக தினம் செப்ரெம்பர் 15 ஆம் திகதியான இன்று (நேற்று) உலகின் ஜன நாயகம் மிக்க நாடுகளில் அனுஷ்டிக்கப்படும். இதனையொட்டி நெடுந்தீவில் இரு நாள் வேலை திட்டம் முன்னெடுக்கப்படுகின் றது என நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்த தேர்தல் ஆணை யாளர் நாயகம் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட ஊடகவிய லாளர்களுடன் யாழ்ப்பாணத் தில் அமைந்துள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் அவர் சந்திப்பை நடத்தினார்.

அவர் அங்கு மேலும் தெரி விக்கையில்-

சர்வதேச ஜனநாயக தினம் செப்ரெம்பர் 15 ஆம் திகதியான இன்று(நேற்று) உலகின் ஜன நாயகம் மிக்க நாடுகளில் அனுஷ்டிக்கப்படும் நிலையில் குறித்த நிகழ்வின் விழிப்புணர்வு நிகழ்வுகள் யாழ்.மாவட்டத்தின் நெடுந்தீவு பிரதேசத்தில் முன் னெடுக்கப்படுகின்றன.

200 இற்கும் அதிக நாடுகள் இருக்கும் சூழலில் 196 நாடுக ளில் இந்த ஜனநாயக தினம் கொண்டாடப்படுகின்றது.

ஜனநாயகம் என்பது தேர் தல்களை நடத்துதல் மட்டு மல்ல அந்த நிலையை மக்களி டையே கொண்டு சென்று இலக்கை அடைவதுமாகும்.

குறிப்பாக இளம் பிரஜை களுக்கு விழிப்புணர்வு கொடுப் பது, நவீனத்துவங்களை உள்வாங்குதல் என்பனவும் இதில் மாற்றத்தை உருவாக்கும் முக்கிய பொறிமுறைகளாக இருக்கின்றன.

இதனடிப்படையில் நெடுந் தீவில் இரு நாள் வேலை திட் டம் முன்னெடுக்கப்படுகின்றது.

குறிப்பாக இன்று(நேற்று), நாளை (இன்று) முன்னெடுக்கப் படும் இந்த விழிப்புணர்வு நிகழ் வுகளின் முதன்மையானதாக தேர்தல் திணைக்களத்துடனான தகவல் தொழில் நுட்பத்தின் வகிபாகத்தை நெடுந்தீவு மக்க ளுக்கு கொண்டுசெல்வதாக உள்ளது - என்றார். (அ)

# ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து பருத்தித்துறையில் லஞ் சீற்றுக்கு தடை

## மாற்றீடாக வாழையிலை பயன்படுத்த தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 16
பருத்தித்துறை நகரசபைக்கு உட்பட்ட உணவகங்களில் எதிர்வரும் முதலாம் திகதி முதல் லஞ் சீற் பயன்படுத்து வதை நிறுத்துவ தென்று பருத் தித்துறை நகர சபையும், பருத் தித்துறை நகர வர்த்தகர்களும் நேற்று தீர்மானித்துள்ளனர்.

பருத்தித்துறை நகரசபை மண்டபத்தில் நகர சபை தவி சாளர் வின்சன்டீ போல் டக் ளஸ் போல் தலைமையில் நகர வர்த்தகர்களுடன் இடம்பெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மா னம் எடுக்கப்பட்டது.

எதிர்வரும் முதலாம் திகதியி லிருந்து உணவகங்களில் பொலித்தீன் பயன்படுத்துவ தில்லை யென்றும், அதற்கு பதிலாக வாழை இலையை பயன்படுத்துவதெனவும், எதிர் வரும் ஜனவரி முதலாம் திகதியி லிருந்து பொலித்தீன் பயன் பாட்டை முற்றுமுழுதாக நிறுத் துவதென்றும் முடிவெடுக்கப் பட்டுள்ளது. (அ-05)

# சர்வதேச சிலம்ப போட்டியில் இலங்கைக்கு 11 பதக்கங்கள்!

கொழும்பு, செப். 16
மலேசியா கோலாலம்பூரில் இடம்பெற்ற சர்வதேச சிலம்பப் போட்டியில் இலங்கை 11 பதக் கங்களை கைப்பற்றி சாதித்துள் ளது.

மலேசிய அரசின் ஏற்பாட் டில் சர்வதேச சிலம்பப் போட்டி 2025 கோலாலம்பூரில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் பங் கேற்ற இலங்கை சிலம்ப அணி சிறப்பான சாதனையைப் பதிவு செய்துள்ளது.

அந்த வகையில் ஒரு தங்கம், 4 வெள்ளி, 6 வெண்கலம் அடங்கலாக இலங்கை 11 பதக் கங்களை வென்றது.

இதற்காக மலேசிய அரசு, வயது பிரிவு அடிப்படையில் தேர்வு செய்யப்பட்ட ஐந்து வீரர்களுக்கான விமான ரிக் கெட்டுகளை இலவசமாக வழங்கியிருந்தது.

இலங்கை சிலம்ப சம்மேளன பயிற்றுவிப்பாளர்களாக ரா.திவா கரன், ஜெகதீஸ் ஆகியோர் அணியை வழிநடத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறீலங்கன் எயார்லைன்ஸ் சிக்கலில்!

கொழும்பு, செப். 16
சிறீலங்கன் எயார்லைன்ஸ் தனது 175 மில்லியன் டொலர் பெறுமதி கொண்ட 7 வீத அரச உத்தரவாதம் பெற்ற பத்திரங் களை மறுசீரமைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தக வல்கள் வெளியாகியுள்ளன.

இந்த பத்திரங்கள் 2024 ஜூன் 25 ஆம் திகதியன்று முதிர்ந்துவிட்டன.

இதன் காரணமாக, இந்த கடன் பத்திரங்களை மீளமைப் பது சாத்தியமில்லை என்பது டன் கடன் பத்திரங்களுக்கான பணத்தை சிறிலங்கன் எயார் லைன்ஸ் முழுமையாகச் செலுத்த வேண்டும் என்ற நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனினும் சிறீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம், இந்த பத்தி ரங்களை முழுமையாகச் செலுத் தும் நிலைமையில் இல்லை என் பதில் உறுதியாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையிலேயே குறித்த விடயத்தில் தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

சிறீலங்கன் எயார்லைன்ஸ் வெளியிட்டுள்ள 175 மில்லியன் டொலர் கடன் பத்திரங்கள் தற்போது இரண்டாம் நிலை சந்தையில் டொலருக்கு 105 சதம் அளவில் வர்த்தக பரிமாற் றத்தைக் கொண்டிருக்கின்றன.

2024 டிசெம்பரில் இந்த பத்திரங்கள் 71 சதம் டொலராக இருந்தன.

எனினும், 2025 ஜூலை 11ஆம் திகதியன்று அது 105.8 சதம் டொலராக உயர்ந்துள்ளன.

இதன் காரணமாகவே இந்த கடன் பத்திரங்களை சிறீலங்கன் எயார்லைன்ஸ் மீளமைப்பது சாத்தியமில்லை என்று சந்தை தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் கடன் வழங்குநர்களின் குழு மற்றும் சிறீலங்கன் எயார்லைன்ஸ் இடையே இது தொடர்பான பேச்சுவார்த்தைகளும் தோல்வி யடைந்துள்ளன.

கடன் வழங்குநர்கள் 98 சதம் டொலரைக் கேட்கும் நிலையில், சிறீலங்கன் எயார் லைன்ஸ் 85 சத டொலரையே தர முடியும் என்று கூறியுள்ள மையால் பேச்சுவார்த்தை தோல்வியடைந்துள்ளது.

இதேவேளை, நிறுவனத் திற்குப் பத்திரங்களை முழுவது மாக திருப்பிச் செலுத்தும் திறன் இல்லையென்று சிறீ லங்கன் எயார்லைன்ஸ் நிறுவ னத்தின் தலைவரான சரத் கணேகொட தெரிவித்துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளில் ஏற்பட்ட தொடர்ச்சியான நட்டங்களை ஈடு கட்ட, அந்தப் பத்திரங்களிலிருந்து பெற்ற பணம் பயன்படுத்தப்பட்டதா கவும், இந்த நட்டங்கள் 2 பில் லியன் அமெரிக்க டொலர்க ளுக்கு மேல் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சிறப்பாக நிகழ்ந்த ஐங்கரநேசனின் வேர்முகங்கள் நூல் வெளியீட்டுவிழா!



யாழ்ப்பாணம், செப். 16
ஓர் ஊடகவியலாளனாக பொ. ஐங்கரநேசன் நிகழ்த்திய நேர்காணல்களில் இருந்து இரு பது கலை, இலக்கியப் பேராளு மைகளுடனான உரையாடல் கள் தொகுக்கப்பட்டு வேர் முகங்கள் என்ற நூலாக வெளி யாகியுள்ளது. இதற்கான வெளி யீட்டு விழா யாழ். பல்கலைக் கழகக் கைலாசபதி கலையரங் கில் நேற்று முன் தினம் ஞாயிற் றுக்கிழமை மிகவும் சிறப்பாக நிகழ்ந்தேறியது.


யாழ். பல்கலைக்கழகச் சைவசித்தாந்தத் துறையின் தலைவர் கலாநிதி தி . செல்வ மனோகரனின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கருத்துரைகளை ஊடகவியலா ளரும் படைப்பாளியுமான சர் மிலா வினோதினி, சமூக ஆய் வாளர் தெ.மதுசூதனன் ஆகி யோர் ஆற்றியிருந்தனர்.

வெளியீட்டு உரையை இந் நூலை வெளியிட்ட எங்கட புத் தகங்கள் பதிப்பகத்தின் பணிப் பாளர் கு. வசீகரன் ஆற்ற, நூலை மூத்த இலக்கியவாதி க. சட்ட நாதன் வெளியிட்டு வைத்தார். சொல்லேர் உழவர் கவிஞர் புதுவை இரத்தினதுரைக்குச் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்த இந்நூலின் முதற் பிரதியை அவரது சகோதரி இராஜ லட் சுமி பத்மநாதன் பெற்றுக் கொண்டார்.

5 பல வருடங்களுக்கு முன் னர் தமிழகத்தில் வெளியாகிய வேர்முகங்கள் தொகுப்பு, ஓர் ஆவணப் பதிப்பாக இப்போது புதிதாக மேலும் ஒரு நேர்கா ணல் உள்ளடக்கப்பட்டு இலங் கையில் வெளியாகியுள்ளது. இந்நூலில் ஈழத்துக் கலை இலக்கிய ஆளுமைகள் கலாநிதி சி. மௌனகுரு, கலாநிதி நா. சுப்பிரமணியன், செங்கை ஆழி யான், சு. வில்வரத்தினம், புதுவை இரத்தினதுரை, இரத் தினதுரை, கலாநிதி பரமு புஸ் பரட்ணம், இ. பத்மநாபஐயர், ஞானரதன், கி.பி.அரவிந்தன் ஆகியோரதும், தமிழகத்தைச் சேர்ந்த பாரதிராஜா, சுஜாதா, டிராட்ஸ்கி மருது, சா.கந்த சாமி, மணவை முஸ்தபா, தி.சு. சதாசிவம், த. ஜெயகாந்தன், அறிவுமதி, டி.திலீப்குமார், பாரதிபுத்திரன், இன்குலாப் ஆகியோரதும் நேர்காணல்கள் இடம்பெற்றுள்ளன.

அரங்கு நிறைந்த பார்வையா ளர்களுடன் நடைபெற்ற இவ் விழாவில் வரவேற்புரையை கலை இலக்கியச் செயற்பாட்டாளர் கை. சரவணன் நிகழ்த்த, விழா வின் இறுதியில் ஏற்பு ரையை நூலின் ஆசிரியர் பொ. ஐங்கர நேசன் நிகழ்த்தினார். (அ-05)

# அரசியல் கைதிகளுடன் உறவினர்கள் சந்திப்பு



யாழ்ப்பாணம், செப். 16
அரசியல் கைதிகளுக்கும் அவர்களது உறவினர்களுக்குமி டையே சந்திப்பு ஒன்று இடம் பெற்றது. இது உணர்வுபூர்வ மாக இருந்தது. அரசியல் கைதி களைச் சந்தித்துவிட்டு கனத்த இதயத்துடனும் கண்களில் கண்ணீருடனும் அரசியல் கைதி களின் உறவுகளும் நாங்களும் வெளியே வந்தோம் என குரல் அற்றவர்களின் குரல் அமைப் பின் செயற்பாட்டாளர் முரு கையா கோமகன் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளை போகம் பரை சிறையில் சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரி விக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்-

குறுகிய நேரத்தில் நடந்த இந்த சந்திப்பின்போது அரசி யல் கைதியான ஆனந்தசுதாகர னின் மகளை தந்தையான ஆனந்த சுதாகரன் தொட்டு உணவூட் டிய அந்த நெகிழ்ச்சிச் சம்பவம் மனதை ரணமாக்கியது. இந்த சந்திப்பு நிரந்தரமாக இந்த பிள் ளைகளுக்கு கிடைக்கவேண்டு மென இந்த நாட்டின் ஜனாதி பதியை கேட்டுக் கொள்கின் றோம்.

தேசிய கைதிகள் தினத்தை முன்னிட்டு கைதிகள் பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய் யப்படுவது வழமை. ஆனால் இந்த ஆண்டு கைதிகள் விடு தலை செய்யப்படவில்லை. தமது விடுதலை இடம்பெறும் என கைதிகள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். மீதமாக உள்ள 10 அரசியல் கைதிகளும் நல்லிணக்கத்தின் அடிப்படை யில் விடுதலை செய்யப்பட வேண்டும் என விநயமாக ஜனா திபதியை கேட்டுக் கொள்கின் றோம் - என்றார். (அ)

# 100 பஸ்களை கொள்வனவு செய்ய அரசாங்கம் திட்டம்!

கொழும்பு, செப். 16
நகர்ப்புறங்களில் பயணிகள் போக்குவரத்தை மேம்படுத்தும் நோக்கில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங் கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு, 100 தாழ்தளப் பஸ்களைக் கொள் வனவு செய்யவுள்ளது.

அமைச்சின் தகவல்படி, குறித்த பேருந்துகள் வசதியா கவும், நவீனமாகவும், முக்கிய நகரங்களில் திறமையான பொதுப் போக்குவரத்து சேவை களைப் பூர்த்தி செய்யும் வகை யில் வடிவமைக்கப்படும்.

இந்த திட்டம், குறிப்பாக முதியவர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அணுகலை மேம்படுத்துவதை நோக்கமா கக் கொண்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

அதே நேரத்தில் பொதுப் போக்குவரத்தை அதிக அள வில் பயன்படுத்துவதை ஊக்கு விப்பதன் மூலம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கவும் முயற் சிக்கப்படுவதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
16.09.2025 செவ்வாய்க்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## வரவேற்கப்படவேண்டிய முடிவு

இலங்கை தமிழ் அரசு கட்சி, தமிழ் மக்களின் பிரச்னைகள் தொடர்பில் ஜனாதிபதியுடன் பிரத்தியேகமாக பேசுவதற்கு முடிவு செய்துள்ளதாக அறிவித்திருக்கின்றது. அரசாங்கத்துடன் பேச வேண்டும் என்று 'ஈழநாடு' தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றது. முன்னைய அரசாங்கங்களோடு பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட இலங்கை தமிழ் அரசு கட்சி ஏன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேசமுடியாது என்னும் கேள்வியையும் நாம் அவ்வப்போது அழுத்திக் குறிப்பிட்டிருந்தோம்.


அரசியலில் என்னதான் முரண்பாடுகள் இருந்தாலும் கூட, இறுதியில் இந்த நாட்டின் ஆட்சியாளர்களோடு பேசித்தான் ஆகவேண்டும். இந்த அடிப்படையில்தான், கடந்த காலத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ்த் தேசியக் கூடமைப்பு ஆட்சியாளர்களோடு பேசியிருக்கின்றது. இந்தப் பின்புலத்தில் தேசிய மக்கள் சக்தியோடும் பேச வேண்டிய கட்டாயமானது. இந்த அடிப்படையில், இலங்கை தமிழரசு கட்சி இப்போதாவது இது தொடர்பில் சிந்தித்திருப்பது வரவேற்றப்பட வேண்டிய விடயம்.

அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு நடத்தவுள்ளதாக தெரிவித்திருக்கின்றது. அதேவேளை உள்ளக பொறிமுறையின் அடிப்படையில் விசாரணை ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்திருக்கின்றது. சர்வதேச விசாரணையை தமிழ் தரப்புகள் கோரினாலும் கூட விசாரணை எதுவாக இருப்பினும் ஆட்சியாளர்களது சம்மதமில்லாமல் எதனையும் இலங்கைக்குள் முன்னெடுக்கமுடியாது. கலப்பு பொறிமுறை தொடர்பில் பேசினாலும் கூட, அரசாங்கம் அதனை அனுமதிக்க வேண்டும். ஆட்சியாளர்களின் சம்மதமின்றி, ஒத்துழைப்பு இன்றி, இலங்கைத் தீவில் எதனையும் முன்னெடுக்க முடியாது.

விடுதலைப் புலிகள் அமைப்பு இராணுவரீதியில் பலமாக இருந்த போதிலும் இறுதியில் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன்தான் பேசும் நிலைமை ஏற்பட்டது. இரண்டு தரப்புக்களும் பேசுவதற்கும் பேசுவதன் அடிப்படையில் முன்னோக்கி பயணிப்பதற்குமான அனுசரணையைத்தான் நோர்வே வழங்கியது.

இதனை இப்போதும் கூட சரியாக புரிந்துகொள்ளாதவர்கள் இருக்கின்றனர். நோர்வேயும் சொல்ஹெய்மும் விடுதலைப் புலிகளை அழிப்பதற்கே திரைமறைவில் திட்டம் தீட்டியதாக கூறுவோர் இப்போதும் உள்ளனர். அடிப்படையில் விடயம், சூழ்நிலையை எவ்வாறு கையாளுவது என்பதுதான் - சூழ்நிலையை சரியாக புரிந்துகொள்ளாமல், வாய்ப்புகளை மிகையாக மதிப்பிடுவதே இறுதியில் அழிவுகளுக்கு வழிவகுக்கின்றன. விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு நடந்தது இதுதான்.

அரசியலில் நண்பர்கள், எதிரிகள் என்று ஒன்றில்லை. ஒவ்வொரு சூழ்நிலைகளின் போதும் நண்பர்களும் எதிரிகளும் வேறுபடுகின்றனர். இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துடன் பேச வேண்டியதும், பேசுவதற்கான கதவை எப்போதும் திறந்து வைத்திருப்பதும் முக்கியமானது. ஜே.வி.பியின் கடந்த காலம் தொடர்பில் பேசுவதில் பயனில்லை. அவர்களது கடந்த காலத்தை தமிழர்களை விடவும் சிங்கள மக்கள் அறிவார்கள். இந்தியா அறியும் - அமெரிக்கா அறியும் ஆனால், அவர்கள் கடந்த காலத்தில் அடிப்படையில் நிகழ் காலத்தை நோக்கவில்லை. நிகழ்காலத்தில் எவர் தலைமையில் இருக்கின்றார்களோ, அவர்களை, அவர்களது எல்லைக்குள் அணுக முற்படுகின்றனர். அதுதான் அரசியல். அப்படித்தான் விடயங்களை நோக்க வேண்டும்.



தியாக தீபம் திலீபனின் ஆரம்ப நாள் நினைவேந்தல் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட வளாகத்தில் நேற்று இடம்பெற்றது. (படங்கள் : த.பிரதீபன்)

## கொழும்பு மத்திய பேருந்து நிலைய நவீனமயமாக்கல் திட்டம் ஆரம்பம்!

கொழும்பு, செப். 16

கொழும்பு மத்திய பேருந்து நிலைய நவீனமயமாக்கல் திட்டம் நேற்று காலை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

'வளமான நாடு - அழகான வாழ்க்கையை' உருவாக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு இணங்க, 'கிளீன் சிறீலங்கா' திட்டத்தின் கீழ் 425 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டைப் பயன்படுத்தி இந்த நவீனமயமாக்கல் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

60 ஆண்டுகளில் இந்த பேருந்து நிலையம் முழுமையாக மூடப்பட்டு அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன மற்றும் கவர்ச்சிகரமான பேருந்து நிலையமாக முழுமையாக அபிவிருத்தி செய்யப்படும் முதற் சந்தர்ப்பம் இது என்பது விசேட அம்சமாகும்.

இலங்கை விமானப்படையின் நேரடி ஆளணி பங்களிப்பு மற்றும் கொழும்பு மாநகர சபை, இலங்கை மின்சார சபை , தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ,வீதி அபவிருத்தி அதிகார சபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்புடன் செயல்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் தேசிய புத்திஜீவிகள் அமைப்பு உள்ளிட்ட அமைப்புகளும் இதில் தன்னார்வமாக பங்கேற்கின்றன.

இந்த திட்டம் 2026 ஏப்ரல் மாதத்தில், சிங்கள-தமிழ் புத்தாண்டுக்கு முன்னர் நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

நினைவுப் பலகையைத் திறந்து வைத்து கொழும்பு மத்திய பேருந்து நிலையத்தின் புனரமைப்புப் பணிகளைத் தொடங்கி வைத்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அந்த வளாகத்தை சுற்றிப் பார்வையிட்டார்.

பிரதி சபாநாயகர் மொஹமட் றிஸ்வி சாலி, நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள், மேல் மாகாண ஆளுநர் ஹனிப் யூசுப், கொழும்பு மேயர் வ்ராய் கெலீ பல்தசார், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் (ஓய்வு) சம்பத் துய்யகொந்தா மற்றும் முப்படைகளின் சிரேஸ்ட அதிகாரிகள் குழு, கிளீன் சிறீலங்கா செயலக அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

## சங்கானை பிரதேச செயலகம் நடத்தும் நடமாடும் சேவை இன்று

யாழ்ப்பாணம், செப். 16

யாழ். மாவட்ட செயலகமும் சங்கானை பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை இன்று காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த நடமாடும் சேவை முகாமில் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், ஓய்வூதியம், தொடர்பான சேவைகள், பிறப்பு - இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதி பத்திரம் தொடர்பான சேவைகள், பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், மனித வள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள் திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் கல்வி வழிகாட்டல்கள், சமூக சேவை பிரிவினரால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், மருத்துவ முகாம், பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை, இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் சேவை என்பன இடம்பெறவுள்ளன.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

துணிச்சலான முடிவுகள் எடுப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். மேலதிகாரி உங்களிடம் புதிய பொறுப்புகளை ஒப்படைப்பார். தைரியம் கூடும் நாள்.

**இடபம்**

குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மிதுனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நேரத்தில் இரண்டு மூன்று வேலைகளை இழுத்துப் போட்டுப்பார்க்க வேண்டும். உத்தியோகத்தில் மறதியால் பிரச்னை வரக்கூடும். சகிப்பு தன்மை தேவைப்படும்.

**கடகம்**

குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து போகும். சாலைகளை கவனமாக கடந்து செல்லுங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**சிம்மம்**

வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பழைய பிரச்னைகளைத் தீர்ப்பீர்கள். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெருந்தன்மையுடன் நடக்குன் நாள்.

**கன்னி**

கடந்த கால சுகமான அனுபவங்களை சாதனைகளை அவ்வப்போது நினைத்து மகிழ்வீர்கள். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைத் தருவார்கள். முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்**

உணர்ச்சி பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசுவீர்கள் செயல்படுவீர்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். அலுவலகத்தில் நிம்மதி உண்டாகும். புதிய பாதை தெரியும்.

**விருட்சிகம்**

சந்திராஷ்டமம் தொடங்கியிருப்பதால் வேலைச் சுமையால் உடல் அசதி சோர்வு வந்து நீங்கும். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**தனுசு**

குடும்ப விசேஷங்களில் கலந்து கொள்வீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மகரம்**

குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் சூட்சமங்களை உணர்வீர்கள்.

**கும்பம்**

புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் ஒரு புதிய சாதனையை படைப்பீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மீனம்**


தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

# மனித புதைகுழிகளுக்கு நீதிகோரி யாழில் கையெழுத்து போராட்டம்

*யாழ்ப்பாணம், செப். 16*

செம்மணி உள்ளிட்ட வடக்கு - கிழக்கில் காணப்படும் மனிதப் புதைகுழிகளுக்கும் இடம்பெற்ற இனப்படுகொலைகளுக்கும் சர்வதேச நீதி கோரி யாழ்ப்பாணத்தில் கையெழுத்து போராட்டம் நடைபெற்றது.

மாற்றத்துக்கான இளையோர் குரல் அமைப்பால் யாழ்ப்பாணம் மருதனார்மடம் பகுதியில் நேற்றுக்காலை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



இதில் மாற்றத்துக்கான இளையோர் அமைப்பின் பிரதிநிதிகள், உறுப்பினர்கள், மருதனார்மடம் வர்த்தகர்கள், சந்தை வியாபாரிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

## விடுதலை நீர் வழங்கிய ஆனந்தசுதாகரன்

*யாழ்ப்பாணம், செப். 16*

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான விடுதலை நீரை ஆனந்தசுதாகரன் வழங்கியுள்ளார்.

தேசிய சிறை கைதிகள் தினம் கடந்த 12ஆம் திகதி கடைப்பிடிக்கப்பட்டது. இந்த தினத்தை முன்னிட்டு குடும்ப சந்திப்புகள் இடம்பெறுகின்றமை வழமை.

அந்த வகையில் அரசியல் கைதி ஆனந்தசுதாகரனின் தாயார், 28 வருடங்களாக சிறையில் வாடும் அரசியல் கைதியான இராமச்சந்திரனின் குடும்பத்தினர், குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு. கோமகன் ஆகியோர் குறித்த அரசியல் கைதிகளை நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

இதன்போது, இராமச்சந்திரனின் பேரப்பிள்ளைகளான சிறுவர்களும் சிறைக்குள் சென்று அவரைப் பார்க்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது அரசியல் கைதிகளின் விடுதலைக்கான விடுதலை நீரை ஆனந்தசுதாகரன் வழங்கினார்.

மேலும், இந்த ஆண்டு கைதிகள் தினத்துக்கு தமது விடுதலை கைகூடும் என நினைத்தபோதும் அது நிறைவேறவில்லை என்றும் அரசாங்கம் தங்களை நிச்சயம் விடுதலை செய்யும் என தாங்கள் நம்புவதாக தமிழ் அரசியல் கைதிகள் தம்மை பார்க்க சென்றவர்களிடம் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

(எ-05)

## டிப்பர் சாரதிகள் போராட்டம் கைவிடப்பட்டது

*கிளிநொச்சி, செப். 16*

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் காலை முன்னெடுக்கப்பட்ட டிப்பர் வாகன சாரதிகளின் கவனவீர்ப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

ஏனைய வாகனங்கள் டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய் பயன்படுத்தும் நிலையில், டிப்பர் வாகனத்தை மட்டும் பொலிஸார் சோதனை செய்வதாக தெரிவித்து கிளிநொச்சியில் டிப்பர் வாகன சாரதிகள் இவ்வாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

டீசலுக்கு பதிலாக மண்ணெண்ணெய் பயன்படுத்தி ஓடும் டிப்பர் வாகனங்கள் டீசலுக்கு மாறுவதற்கு ஒருவாரம் அவகாசம் தருமாறு கோரியும் மண்ணெண்ணெய் பயன்படுத்தும் அனைத்து வாகனங்களையும் பொலிஸார் கண்டறிய வலியுறுத்தியும் டிப்பர் வாகன சாரதிகள் ஏ - 9 வீதியில் கிளிநொச்சி மருத்துவமனைக்கு அருகாமையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் டிப்பர் சாரதிகளுடன் கலந்துரையாடி, ஒரு வார கால அவகாசத்துக்கு சம்மதம் தெரிவித்ததைத் தொடர்ந்து. போராட்டம் கைவிடப்பட்டது. (எ)

## மோ. சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் காயம்

*வவுனியா, செப். 16*

வவுனியா, பேயாடிகூழாங்குளத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் முதியவர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலிருந்து ஓமந்தை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மாடு மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் ஓமந்தையை சேர்ந்த 60 வயது முதியவர் ஒருவரே காயமடைந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-10)

## யாழ். மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரை 943 டெங்கு நோயாளர்கள் அடையாளம்

*யாழ்ப்பாணம், செப். 16*

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 943 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மாவட்டத்தில் டெங்கு நோய் நிலைமை கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

தற்போது பருவமழை ஆரம்பித்திருப்பதால் டெங்கு நோய் நிலைமை தீவிரமடையக் கூடிய வாய்ப்பு காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணம் மரியன்னை பேராலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற டெங்கு நோய் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

(எ)

## முல்லையில் ‘வெண்வெளி யுத்தம்’ நூல் வெளியீடு

*முல்லைத்தீவு, செப். 16*

முல்லைத்தீவு விசுவமடு மகா வித்தியாலய கணிதப்பிரிவு உயர்தர மாணவன் தவயோகன் தர்சாந்தின் அறிவியல் சார்ந்த நூலான வெண்வெளி யுத்தம் என்ற நூல் வெளியீட்டு விழா விசுவமடு மத்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புதுக்குடியிருப்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. பாஸ்கரன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு மாவட்ட உதவிச் செயலாளர் கேகிதா லிசோ கலந்து கொண்டார்.

பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பிரதேச பொது அமைப்பு சார்ந்தோர், பாடசாலை மாணவர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்நாட்டு பொறிமுறைகள் மூலமே நல்லிணக்கத்தை அடைவதில் உறுதி!

## அமைச்சர் விஜித ஹேரத் அறிக்கை

கொழும்பு, செப். 16

**உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் நல்லிணக்கத்தை அடைவதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை அமைச்சர் விஜிதஹேரத் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.**



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது அமர்வில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் ஜெனீவா பயணம் நிறைவடைந்துள்ள நிலையில் அமைச்சு அறிக்கையின் ஊடாக இதனை தெரிவித்துள்ளது.

அனைத்து இலங்கையர்களின் பொருளாதார, சமூக சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் உட்பட அனைத்து மனித உரிமைகளையும் நிவர்த்தி செய்யவேண்டியதன் அவசியம் தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்தின் ஜெனீவா விஜயத்தில் கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்கும் நாட்டுக்குள் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை அரசாங்கத்துக்கு வழங்கக்கூடிய ஒத்துழைப்பு மற்றும் உதவி குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அவற்றை முழுமையாக நிறைவேற்ற அரசாங்கத்துக்கு நேரம் மற்றும் அவகாசம் தேவை என்பதை அமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையாளர் வோல்கர் டர்க்கை சந்தித்த போது அமைச்சர் குறித்த விடயங்களை வலியுறுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மனித உரிமைகள் பேரவையின் தலைவரான, சுவிட்சர்லாந்தின் ஜூர்க் லோபரையும் அமைச்சர் விஜித ஹேரத் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடனான இலங்கையின் உயர் மட்ட அரசியல் ஈடுபாட்டின் அவர் வரவேற்றதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# செப்ரெம்பர் மாதத்தில் இதுவரை 52,246 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, செப்.16

2025 செப்ரெம்பர் மாதத்தில் இதுவரை மொத்தம் 52,246 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இந்தியாவில் இருந்து மொத்தம் 14,300 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். இது 27.4 வீதம் ஆகும்.

மேலும், செப்ரெம்பர் மாதத்தில் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 4,092 பேர், ஜேர்மனியிலிருந்து 3,488 பேர், சீனாவிலிருந்து 2,796 பேர் மற்றும் ஆஸ்திரேலியாவிலிருந்து 2603 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதற்கிடையில், செப்ரெம்பர் மாதத்திற்கான அண்மைய புள்ளிவிவரங்கள் வெளியிடப்பட்டதன் மூலம், 2025 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1,618,769 ஆக அதிகரித்துள்ளது. (அ)

# இரு யானைத் தந்தங்களுடன் ஓய்வு பெற்ற சிப்பாய் கைது!

கொழும்பு, செப். 16

ஒரு ஜோடி யானை தந்தங்களை வைத்திருந்த ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் ஒருவர் மொரகொட பொலிஸ் நிலைய அதிகாரிகள் நடத்திய சோதனையின் போது கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபர் ஹல்மில்லவெவ பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய ஓய்வுபெற்ற இராணுவ சிப்பாய் ஆவார்.

மொரகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி, மொரகொட ஹல்மில்லேவ பகுதியில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது இந்த ஜோடி தந்தங்கள் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி தங்க பிஸ்கட்டுக்களுடன் சிக்கினார்!

கொழும்பு, செப். 16

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து 210 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் பெறுமதியான தங்க பிஸ்கட்டுகளுடன் விமான நிலைய தலைமை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் சுங்க அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 54 வயதுடைய சந்தேக நபர், சிவில் விமானப் போக்குவரத்து பாதுகாப்பு சேவைகள் அமைப்பின் தலைவராகவும் உள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவரிடமிருந்து மீட்கப்பட்ட தங்க பிஸ்கட்டுகளின் எடை 5.94 கிலோ கிராம் ஆகும்.

விமான நிலையத்தில் ஒரு குறிப்பிட்ட நபர் இந்த தங்க பிஸ்கட்டுக்களை அவரிடம் ஒப்படைத்திருக்கலாம் என்றும், சந்தேக நபர் நீண்ட காலமாக இந்தக் கடத்தலை மேற்கொண்டு வந்திருக்கலாம் என்றும் சுங்க அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் சந்தேக நபரை காவலில் எடுத்துள்ளனர். (அ)

# அரசுக்குள்ளே ஊழல் நடந்தாலும் அதற்கெதிராகவும் நடவடிக்கை!

## அமைச்சர் சமந்த வித்தியாரத்ன



கொழும்பு, செப். 16

அரசாங்கத்துக்குள் ஊழல், மோசடிகள் இடம்பெற்றாலும் அவற்றுக்கெதிராகவும் நடவடிக்கை எடுப்பதில் பின்வாங்கப் போவதில்லை. கொள்கலன் விடுவிப்பு குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் யார் தவறிழைத்திருந்தாலும் அவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்படவில்லை. தற்போது ஆரம்ப அடியை எடுத்து வைத்திருக்கின்றோம். இதில் இறுதி வரை பயணிக்க முடியும். நீதிக்கான உண்மையான சுற்றிவளைப்புக்கள் இப்போது தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் இதற்காக நடவடிக்கைகள் குறிப்பிட்டவொரு சமூகத்துக்காக மாத்திரமே முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தற்போது சட்டம் அனைவருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் அற்ற தூய்மையான இலங்கையை கட்டியெழுப்புவதற்கான நீண்ட கால வேலைத்திட்டத்தை நாம் முன்னெடுப்போம். குறுகிய காலத்துக்குள் போதைப்பொருள் ஆக்கிரமிப்பில் இருந்து நாட்டை விடுவிப்போம். தற்போது அரசாங்கத்தை விமர்சிப்பதற்கு எதிர்க்கட்சிகளிடம் எந்த விடயமும் இல்லாததால் கொள்கலன் விடுவிப்பைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இது குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதில் யார் தவறிழைத்திருந்தாலும் அவர்கள் அரசாங்கத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும்.

அரசாங்கத்துக்குள் ஊழல், மோசடிகள் இடம்பெற்றாலும் அவற்றுக்கெதிராகவும் நடவடிக்கை எடுப்பதில் பின்வாங்கப் போவதில்லை. மக்கள் வழங்கிய ஆணைக்கமையவே ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் நீக்கப்பட்டுள்ளன. நாட்டிலுள்ள சகல முன்னாள் ஜனாதிபதிகளும் இதுவரை காலமும் இந்த சலுகைகளை அதியுச்சமாக அனுபவித்திருக்கின்றனர். ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவை தொடர்பில் எந்த எதிர்பார்ப்பும் இன்றி இந்த சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளார்- என்றார். (அ)

# நீராடச் சென்ற சிறுவன் பரிதாபகரமாக மரணம்!

கொழும்பு, செப். 16

கலேவெல பிரதேசத்தில் உள்ள தேவஹூவ நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் தேவஹூவ, கலேவெல பகுதியைச் சேர்ந்த 11 வயது சிறுவன் ஆவார்.

குறித்த சிறுவன் தனது தந்தை மற்றும் உறவினர்களுடன் நீர்த்தேக்கத்தில் நீராடச் சென்ற போது நீரில் மூழ்கியுள்ளார்.

பின்னர் உறவினர்கள் மற்றும் உள்ளூர்வாசிகள் நீரில் மூழ்கிய சிறுவனை மீட்டு கலேவெல வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு மேற்கொள்ளப்பட்ட ஆரம்பப் பரிசோதனைகளில் சிறுவன் உயிரிழந்து விட்டதாக கண்டறியப்பட்டது. (அ)

# கடனை மீளளிக்கக்கூடியவாறு பொருளாதார வளர்ச்சி இல்லை

கொழும்பு, செப். 16

நாடு என்ற ரீதியில் நாம் 2028ஆம் ஆண்டு முதல் ஆண்டுதோறும் 5.6 பில்லியன் டொலர் கடனை மீளச் செலுத்தவேண்டும். அதற்கு பொருளாதார வளர்ச்சியை 5 வீதமாக பேணிச் செல்லவேண்டும். எனினும் இதுவரை நாம் அந்த இலக்கை எட்டவில்லை. இந்தப் பிரச்னைகளுக்கு குறுகிய காலத்துக்குள் பதில்களை தேடவேண்டியது அவசியமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம், விலச்சிய பிரதேச செயலாளர் பிரிவில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இன்று நாட்டில் விவசாயம் செய்வது கடினமானதொன்றாக மாறிவிட்டது. உயர்தர உரமோ அல்லது உர மானியங்களோ கிடைத்தபாடில்லை. மலிவு விலையில் வேளாண்மைக்கான இரசாயன பொருட்கள் கிடைத்தபாடில்லை. உபகரணங்களின் விலை அதிகரிப்பிற்கு மத்தியில், உற்பத்திச் செலவுகளும் அதிகரித்துள்ளன. இவற்றோடு யானை-மனித மோதல் போன்ற காரணங்களால் கடுமையான பிரச்னைகளை எதிர்கொண்டு விவசாயிகளுக்கு மத்தியில் விவசாயம் இடம்பெற்று வருகிறது. ஆனாலும் இன்று நெல் அறுவடைக்கு உத்தரவாத விலை கூட கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

நெல்லின் உத்தரவாத விலை கிலோ ஒன்றுக்கு 120 ரூபாவாக இருக்கும் என எதிர்பார்க்கப்பட்டாலும், தேர்தல் காலத்தில், உத்தரவாத விலையை கிலோ ஒன்றுக்கு 150 ரூபாவாக, சட்டங்கள் மூலம் உறுதிப்படுத்தித் தருவோம் என்று இன்றைய ஆளும் தரப்பினர் கூறினர். ஆனால் இன்று நெல்லை 90-95 ரூபாவுக்கே கொள்வனவு செய்கின்றனர். இன்று, உத்தரவாத விலைக் களத்தில் யதார்த்தமான ஒன்றாக மாறவில்லை. வெறும் தேர்தல் வாக்குறுதியாகவே காணப்படுகின்றன. அவ்வாறே உர மானியமும் காணப்படுகின்றது. இவற்றுக்கு மத்தியில் விவசாயிகள் பல சிக்கல்களையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

இன்று நாடு விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லைக் கூட சுரண்டும் நிலையை அடைந்துள்ளது. நாட்டில் வறுமை உருவாகி, பல கடுமையான பிரச்னைகளுக்கு வழிவகுத்துள்ளன. பணம் இல்லாமல், நுகர்வு, உற்பத்தி மற்றும் ஏற்றுமதிகள் குறைந்துள்ளன. 2028 முதல் ஆண்டுதோறும் டொலர் 5.6 பில்லியன் டொலர் கடனை அடைக்க பொருளாதார வளர்ச்சி விகிதத்தை 5 வீதமாக பேணிச் செல்ல வேண்டும். என்றாலும், இது நடந்தபாடில்லை. இந்தப் பிரச்னைகளுக்கு பதில்களை தேட வேண்டியுள்ளது.

இன்று, நாட்டில் மருந்துகளுக்கு கடுமையான பற்றாக்குறை நிலவுகின்றது. அரச மருத்துவமனைகளில் கூட போதிய மருந்துகள் இல்லை. எனவே, தனியார் மருந்தகங்களில் மருந்து வாங்குவதற்கு நிறைய பணம் செலுத்த வேண்டிய நிலைக்கு நோயாளிகள் தள்ளப்பட்டுள்ளனர். கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதுமான இலவச மருந்துகளை வழங்க முடியாவிட்டால், இலவச சுகாதாரக் கொள்கை பயனற்றதாகி விடும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு தரப்பினரும் சமூகப் பொறுப்பை கருத்தில் கொண்டு இயங்கவேண்டும்

## வீரமுனை வளைவு வழக்கு தொடர்பில் நீதிவான் ரஞ்சித்குமார் அறிவுறுத்தல்

சம்மாந்துறை, செப். 16

**சர்ச்சைக்குரிய சம்மாந்துறை வீரமுனை வளைவு பிணக்கு தொடர்பில் இரு தரப்பினரும் சமூகப் பொறுப்புணர்வுடன் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் என்று சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற நீதிவான் கே. ரஞ்சித்குமார் தெரிவித்தார். நேற்றுத் திங்கட்கிழமை மன்றில் அவர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கினார்.**

குறித்த வீரமுனை வரவேற்பு வளைவு வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

சம்மாந்துறை பிரதேச சபை சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி நிஸாம் காரியப்பர் மற்றும் பிரதிவாதிகளான ஆலய நிர்வாகம் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் மற்றும் கனிஷ்ட சட்டத்தரணிகளான சுதர்சன், கமல், பெனிஸ்லஸ் துஷான், அ.நிதான்சன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர்.

இதன்போது, இரு சமூகமும் சமூக பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என நீதிவான் நீதிமன்றத்தால் பணிக்கப்பட்டது.

மேலும் இது அதிகாரம் சம்மந்தப்பட்ட விடயம் அல்ல. இது சமூகம் சார்ந்த விடயம்.

மேலும் இந்த பிணக்கை இணக்கமாக சட்ட அனுமதியோடு தீர்ப்பதற்காக அடுத்த வருடம் ஜனவரி மாதம் 09 ஆம் திகதி வரை வழக்கு ஒத்திவைக்கப்பட்டது. (எ- 08)

# குறைவாக வாக்கெடுத்து ஜனாதிபதியானவர் அநுர

## சுமந்திரன் சுட்டிக்காட்டு

ஆலையடிவேம்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலில் கூட அநுரகுமார திஸநாயக்க 50 சதவீதம் வாக்கு பெற்றிருக்கவில்லை. 42 சதவீதம் தான் அவர் பெற்றிருந்தார். இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக 50 சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளை பெற்று ஜனாதிபதியானவர் அநுர தான் என தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் ஆலையடிவேம்பு பகுதியில் தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயல்குழு கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெறுவதற்கான சாத்தியம் இருக்கிறது. ஆனால், அரசாங்கம் தேர்தலை சந்திப்பதற்கு பயந்து கொண்டு இதனை இழுத்தடிப்பதாக எமக்குத் தோன்றுகின்றது. தற்போதைய அரசாங்கத்துக்கு ஏதோ ஒரு வகையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்துவிட்டது.

இந்த அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்கள் கூட, தாங்கள் பிழையானவர்களைத் தெரிவு செய்து விட்டோம் என்ற ஒரு மனநிலையில் உள்ளனர்.- என்றார். (எ-01)

# வீதியை புனரமைத்து தருமாறு மக்கள், பயணிகள் கோரிக்கை



தம்பலகாமம், செப். 16

திருகோணமலை மாவட்டம், தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தாயிப் நகர் கோவில் வீதி மற்றும் வெம்பு கொலனி வீதி மிக மோசமாக பாதிப்படைந்து காணப்படுகிறது.

இவ் பிரதான வீதியூடாக நாளாந்தம் மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் பல்வேறு அசௌகரியங்களுக்கு மத்தியில் பயணம் செய்கின்றனர்.

எனவே, இவ் வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் புனரமைத்து தரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த வீதி காப்பெற் வீதியாக அமைக்கப்பட்ட போதிலும் நடுவில் பாரிய சேதம் மற்றும் பள்ளம் காணப்படுகிறது. இதனால், பெரும் சிரமம் ஏற்படுவதாக மக்கள் கூறினர். (எ)

# தேசிய மட்ட கராத்தே போட்டியில் திருக்கோவில் வலயம் முதலிடம்

திருக்கோவில், செப். 16

கல்வி அமைச்சால் நடத்தப்படும் அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 2025 ஆம் ஆண்டின் கராத்தே சுற்றுப் போட்டியில் அம்பாறை மாவட்டம் திருக்கோவில் கல்வி வலயம் சாதனை படைத்துள்ளது.

இந்தப் போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்று அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கராத்தே போட்டியில் முதலாம் இடத்தை சுவீகரித்து இந்தச் சாதனையை குறித்த பாடசாலை படைத்துள்ளது.

இப்போட்டி கடந்த 12,13,14 ஆம் திகதிகளில் பண்டாரகம உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்போட்டியில் திருக்கோவில் கல்வி வலயத்தை சேர்ந்த மூன்று பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொண்டனர். சிறீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலை, இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை மற்றும் கண்ணகிபுரம் வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களே கலந்து கொண்டனர்.

இதில் சிறீ இராமகிருஷ்ணா தேசிய பாடசாலை மாணவர்கள் 03 தங்கம் - 02 வெள்ளி - 02 வெண்கலம் அடங்கலாக மொத்தம் - 07 பதக்கங்களை வென்றனர்.

அது மட்டுமல்லாது 16 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான சம்பியனாக சிறீ இராமகிருஷ்ண தேசிய பாடசாலை தெரிவு செய்யப்பட்டதுடன் 20 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டது.

மேலும் எஸ். நவக்சன் எனும் மாணவன் இவ்வருடத்துக்கான சிறந்த கராத்தே வீரனாக தொடர்ந்து இரண்டாவது தடவையாக தெரிவு செய்யப்பட்டார்.

இம் மாணவர்கள் அனைவரும் ராம் கராத்தே சங்கத்தில் பயிற்சிகளை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (எ-08)

# இலவச மருத்துவ முகாம்

திருக்கோவில், செப். 16

கிழக்கு மாகாண ஆளுநரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் மாகாண சுகாதார அமைச்சின் கீழ் உள்ள திணைக்களங்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் திருக்கோவில் தாண்டியடி விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த மருத்துவ முகாமின் ஊடாக திருக்கோவில், ஆலையடிவேம்பு, பொத்துவில் பிரதேச பொது மக்களுக்கு சேவைகள் வழங்கப்பட்டன.

மருத்துவ முகாமில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜீ. திஸநாயக்க, உதவிச் செயலாளர் எஸ். கரன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (எ)

# மட்டு. மாமாங்கம் கிராமத்தின் அபிவிருத்தி குறித்து ஆராய்வு

மட்டக்களப்பு, செப். 16

மட்டக்களப்பு, மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாமாங்கம் கிராம உத்தியோகத்தர் பிரிவு மக்களின் கோரிக்கைக்கு அமைய நேற்று முன்தினம் அங்கு சென்ற பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு கிராம மக்களின் தேவைகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

மாமாங்கம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பி. நாகராஜா தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் எம். உதயராஜ்,

வவுணதீவு பிரதேச சபை உறுப்பினர் எ. ரத்னசிங்கம், மாமாங்கம் கிராம சேவை உத்தியோகத்தர் புண்ணியமூர்த்தி கிருத்திகா, பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சுந்தரவதனி ராஜ்குமார் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சேதமடைந்த மாமாங்கம் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம், நெசவு நிலையம் மற்றும் புனரமைக்கப்படாமல் காணப்படும் சேதமடைந்த வடிகான்கள் ஆகியவற்றையும் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு நேரில் சென்று பார்வையிட்டதுடன், மாமங்கம் கிராமத்தில் புனரமைக்க வேண்டிய திட்டங்களுக்கான திட்ட முன்மொழிவையும் கிராம மக்களிடம் பெற்றுக்கொண்டார். (எ)

# வெருகல் வட்டவன் கிராமத்தில் காட்டு யானையால் வீடு சேதம்

திருகோணமலை, செப். 16

திருகோணமலை - வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வட்டவன் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் அதிகாலை உட்புகுந்த காட்டு யானைகள் வீடொன்றை சேதப்படுத்தியுள்ளன.

வீடு சேதமாகியுள்ளதுடன் வீட்டில் காணப்பட்ட உபகரணங்கள் மற்றும் மின்சார இணைப்புகளையும் காட்டு யானைகள் சேதப்படுத்தின.

காட்டு யானையின் அச்சுறுத்தலால் வீடுகளில் உறங்கக் கூட அச்சமாக இருப்பதாகவும் வெருகல் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாகவும் பிரதேச மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, இவ் விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி யானை தடுப்பு பாதுகாப்பு வேலி அமைத்துத் தர வேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட வீட்டுக்கு நஷ்டஈடு வழங்க முன்வர வேண்டும் எனவும் வெருகல் -வட்டவன் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)

# பல்வகைமை போக்குவரத்து முனைய வேலைத்திட்டம் 35 வீதம் முன்னேற்றம்

கண்டி, செப். 16

கண்டி பல்வகைமை போக்குவரத்து முனைய வேலைத்திட்டம் 35 சதவீதம் முன்னேற்றமடைந்துள்ளது.

கண்டி பல்வகை போக்குவரத்து முனையத்தின் அபிவிருத்தி தொடர்பான நேரடி கண்காணிப்பு பயணம் ஒன்றை மத்திய மாகாண ஆளுநர் எஸ். பி. எஸ். அபயகோன் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் கட்டுமானப் பணிகள் 2024 இல் தொடங்கப்பட்டது. இதற்கு 69. 6 மில்லியன் டொலர்கள் செலவாகும் என உலக வங்கியால் மதிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கண்டி நகரில் தரமான போக்குவரத்து சேவைகளை வழங்கும் நோக்கில் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டப்பட்டு வரும் இலங்கையின் மிகப்பெரிய பல்வகைமை போக்குவரத்து முனையத்தின் செயல்பாடு மற்றும் திட்ட மதிப்பாய்வு, அதன் தற்போதைய நிலை மற்றும் நிர்மாணத்தின் போது எதிர்கொள்ளும் சிக்கல்களை ஆராய்வதற்கும் ஒரு கலந்துரையாடலும் மேற்படி பயணத்தின் போது மேற்கொள்ளப்பட்டது.

இந்த பல்வகைமை போக்குவரத்து முனைய அபிவிருத்தி திட்டத்தின் தற்போதைய கட்டுமானத்தில் 35 சதவீதம் முன்னேற்றம் இருப்பதாக தெரியவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாகாணத்...

நிறைவேற்றினால் பழைய முறைமையில் தேர்தலை நடத்த முடியும். அதற்கு ஏற்ற கால அவகாசமும் உள்ளது - என்றார். (அ)

### தியாகி...

இதன் போது பொதுச் சுடர் ஏற்றி மலர்மாலை அணிவிக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது. இவ் நினைவேந்தல் நிகழ்வில் முன்னாள் போராளிகள், அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். (அ-05)

### இரண்டாம்...

இரண்டாவது காலாண்டில் 2,883,559 மில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இது 2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 2,749,504 மில்லியன் ரூபாவாக பதிவாகியிருந்தது.

அதன்படி, 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியானது நேர் பெறுமானத்தில் 4.9 வீதமாக அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில், விவசாய நடவடிக்கைகள், தொழில்துறை மற்றும் சேவை நடவடிக்கைகள் முறையே 2.0 வீதம், 5.8 வீதம் மற்றும் 3.9 வீதம் விரிவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

### புதிய...

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கட்சி ஆதரவாளர்களுடனான சந்திப்புகளை மீண்டும் தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி பதவியை இழந்த பிறகு "மகிந்தவின் காற்று" இயக்கம் தொடங்கப்பட்டது போலவே, குறித்த புதிய அரசியல் முயற்சியும் விரைவில் அறிமுகப்படுத் தப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக பொதுஜன பெரமுனவின் மூத்த செய்தித் தொடர்பாளர் ஒருவர் குறிப்பிட்டார். (அ)

### சாவகச்சேரி...

இரு உறுப்பினர்களது இருப்பிட உறுதி விடையம் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்தப்பட்டது.

ஆனாலும் அந்த தீர்பின் இறுதி அறிக்கை அதிகாரபூர்வமாக தேர்தல் ஆணைக்குழுவுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

ஒருவரது தனிப்பட்ட விடயம் தொடர்பில் வேட்புமனு நிராகரிக்கப்படாது. ஆனாலும் குறித்த வழக்கின் தீர்ப்பு பெண் உறுப்பினர்களின் பிரதிநிதித்துவம் தொடர்பானதாக இருப்பதால் வேட்புமனுவில் கோரியபடி பெண் பிரதிநிதித்துவம் இல்லாதுவிடின் அது குறித்து நடவடிக்கைக்கு செல்லவேண்டும்.

எனவே நீதிமன்றின் தீர்ப்பு கிடைத்தால் அது தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கூடி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கும் - என்றார். (அ-3)

### சென்னை...

கவலையைத் தூண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்கூட்டிய இராஜதந்திர அல்லது வெளிநாட்டு சேவை அனுபவம் இல்லாத கேதீஸ்வரன், இலங்கையின் மிக மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வெளிநாட்டுப் பதவிகளில் ஒன்றுக்காக நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்தன.

இந்த நிலையில் இந்த நியமனம் குறித்து வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவரை தொடர்பு கொண்டு வினவியபோது-

தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே இருக்கின்றது. அதற்கமைய தூதுவர்களை ஜனாதிபதி நியமித்து அனுப்புவார் என்றும் தெரிவித்தார். (அ)

*11 இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவம்*

# வசந்த கரன்னகொடவுக்கு எதிரான வழக்கை விசாரணை செய்ய அனுமதி!

கொழும்பு, செப். 16

கடந்த 2008 முதல் 2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் 11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்களாக குறிப்பிடப்பட்ட சந்தேக நபர்களின் பெயர் பட்டியலில் இருந்து முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொடவின் பெயர் நீதிபதியால் நீக்கப்பட்டதை இரத்து செய்யுமாறு கோரி பாதிக்கப்பட்ட இளைஞர்களின் பெற்றோர் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்த மனு உயர்நீதிமன்ற நீதவான் முன்னிலையில் நேற்று திங்கட்கிழமை அழைக்கப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மனு எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# இலங்கையில் முதலிட சரியான தருணம் இது!

## தென்னிந்திய தொழில் முனைவோருக்கு அழைப்பு

சென்னை, செப். 16

தென்னிந்தியாவின் தொழில் முனைவோர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு இலங்கையில் உருவாகி வரும் இணையற்ற வர்த்தக வாய்ப்புகள் குறித்து ஆராயவும் ஆலோசனை நடத்தவும் தென்னிந்தியாவுக்கான இலங்கை துணைத் தூதுவர் கணேசனாதன் கேதீஸ்வரன் அழைப்பு விடுத்துள்ளார்.

தங்கள் உலகளாவிய தடம் மற்றும் உற்பத்தி திறன்களை விரிவுபடுத்த விரும்பும் இந்திய நிறுவனங்களுக்கு இலங்கை சிறந்த இடமாக திகழும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது-

இலங்கை வெறும் ஒரு தீவு மட்டுமல்ல, அது பாலத்தை போல திசைகளை இணைக்கும் நாடு. கிழக்கு மேற்காக பயணிக்கும் கப்பல்கள் செல்லும் பாதையில் அமையப்பெற்றுள்ள தேசம். இதன் மூலம் முதலீட்டாளர்கள் தெற்காசியா, தென்கிழக்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பரந்த நுகர்வோர் சந்தைகளை ஆராய முடியும்.

இலங்கையில் தொழில் துவங்க தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா அல்லது புதுச்சேரியை சேர்ந்த தொலைநோக்கு பார்வை கொண்ட தொழில்முனைவோர்களுக்கு கணிசமாகக் குறைக்கப்பட்ட தளவாடச் செலவுகள், வர்த்தகத்திற்கு முன்னுரிமை தரும் அரசாங்கத்தின் அணுகுமுறை, மற்றும் மிகவும் கல்வியறிவு பெற்ற, திறமையான பணியாளர்கள் போன்ற சாதகமான சூழ்நிலைகளாலும் இந்த நாடு அவர்களுக்கு பிரதான தேர்வாக அமையும்.

பங்கு சந்தையில் காணப்படும் மீள்தன்மை மற்றும் உயர்ந்து வரும் பங்கு குறியீடுகள் நமக்கு தெளிவான சமிக்ஞைகளை அளிக்கின்றன.

அவை எமது புதிய அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் அதன் வலிமையான பொருளாதாரக் கொள்கையை பிரதிபலிக்கின்றன.

கடினமான காலகட்டத்தை நாம் கடந்து விட்டோம். நிலையான வளர்ச்சி எனும் தாரகமந்திரம் மற்றும் அந்நிய நேரடி முதலீடுகளை ஈர்த்தல் போன்றவற்றால் வளர்ச்சிப் பாதைக்கு செல்கிறோம். இலங்கையின் சந்தைக்குள் நுழைவதற்கு இதுவே சரியான தருணம்.

முதலீட்டாளர்களுக்கு முக்கிய சலுகைகள், வரிப் பயன்கள், உலகத்ததரத்துடன் கூடிய தொழில்துறை மண்டலங்கள், தொழில் தொடங்குவதற்கு நெறிப்படுத்தப்பட்ட செயல்முறை திட்டங்கள் போன்றவற்றை இலங்கை அரசாங்கம் வழங்குகிறது. பின்வரும் துறைகள் முதலீட்டிற்கு மிகவும் உகந்தவை ஆகும்.

மேம்பட்ட உற்பத்தி மற்றும் மின்னணுவியல் விவசாயம் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக செயல்முறை மேலாண்மை (BPM) மருந்துகள் மற்றும் மருத்துவ சாதனங்கள் வேளாண் பதப்படுத்துதல் மற்றும் உணவு சார்ந்த தொழில் (Food Packaging) புதுப்பிக்கத்தக்க எரிசக்தி சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் உள்கட்டமைப்பு தென்னிந்தியாவுடன் ஆழ்ந்த சரித்திர, மொழி மற்றும் கலாச்சார பந்தங்களை இலங்கை கொண்டுள்ளது. முதலீட்டாளர்களுக்கு கள ஆய்வு முதல் தொழிற்சாலை திறப்பு விழா துவங்கும் வரை எனது தூதரக அலுவலகம் செயன்முறை திட்டங்கள் மற்றும் அரசாங்க விதிமுறைகளை நடைமுறைப் படுத்த அவர்களுக்கு உறுதுணையாய் நிற்கும்.

ஆர்வமுள்ள தொழில் முனைவோருக்கு இலங்கை துணைத் தூதரகம் சார்பாக பிரத்தியேக சந்திப்புகள், துறைசார்ந்த கலந்தாலோசனைகள், தொழில்துறை மண்டலங்களின் மெய்நிகர் சுற்றுப்பயணம் போன்றவற்றிற்கு ஏற்பாடு செய்யவும் நாங்கள் திட்டமிட் டுள்ளோம்" - என்றார். (அ)

### மீண்டும்...

சந்திப்புகள் மற்றும் ஏனைய தேவைகளுக்காக கொழும்பு வர நேரிட்டல் அவர் வருவார், பிறகு ஊருக்கு திரும்புவார் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

### வறுமை...

இதனை குறைப்பதே எங்களுடைய நோக்கம்.

நாட்டில் சமூக நீதி மூலம் பொருளாதார வளர்ச்சியை உருவாக்குவதன் மூலம் சிறைக்குச் செல்லும் கைதிகளின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும் - என்றார்.

### போதை...

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய போதை தடுப்புப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

விசாரணைகளின் பின்னர் குறித்த சந்தேக நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

### இலங்கைக்கும்...

இணைந்து ஏற்பாடு செய்திருந்த 'ராமாயணா' கலாசார மாநாடு, யாழ்ப் பாணம் திருவள்ளுவர் கலாசார மண்ட பத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ஆளுநர் தனது உரையில் தெரிவித்ததாவது-

பல நூற்றாண்டுகளாக, இராமாயணமும் மகாபாரதமும் மனிதகுலத்துக்கு உயர்ந்த இலட்சியங்களை வழங்கும் அடித்தள நூல்களாகச் செயல்பட்டு வருகின்றன. இவை நமது இரு நாட்டு மக்களுக்கும் பொதுவான காவியமாக மாறியுள்ளன.

வடக்கு மாகாண மக்களின் மனதில் இராமாயணம் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. கம்பராமாயணம் என்ற மாபெரும் காவியம் தமிழ் இலக்கியத்தின் ஒரு மூலக்கல்லாகக் கொண்டாடப்படுகிறது. இது நமது மொழியை வளப்படுத்துகிறது.

இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்கள் வெறும் உருவங்கள் அல்ல. அவர்கள் தமிழ் கலாசாரத்துடன் ஆழமாகப் பின்னிப் பிணைந்த மதிப்புக்களின் உருவகங்கள். ஒரு நீதியுள்ள தலைவர் தனது தனிப்பட்ட துயரங்களுக்கு அப்பால் தனது மக்களை எவ்வாறு வழி நடத்துகிறார் என்பதை இராமர் என்ற கதாபாத்திரத்திலிருந்து கற்றுக்கொள்கிறோம். மேலும் சீதாவிடமிருந்து, தூய்மை, அன்பு, தியாகம் மற்றும் மகத்தான துன்பங்களைத் தாங்கும் வலிமை ஆகியவற்றைக் கற்றுக்கொள்கிறோம். அவளுடைய அசைக்க முடியாத பக்தி மற்றும் நீதி ஒரு சக்திவாய்ந்த உதாரணமாகவே உள்ளது.

இந்தக் காவியம் வெறும் நூல்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட கதை அல்ல. அதன் மரபு இலங்கையின் நிலப்பரப்பில் பொறிக்கப்பட்டுள்ளது. இராமாயண வரலாற்றின் உயிருள்ள சான்றுகளாகவும், சுற்றுலாப் பயணிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் யாத்ரீகர்களுக்கு விலைமதிப்பற்ற தளங்களாகவும் செயல்படும் ஏராளமான இடங்களுக்கு எங்கள் தீவு தாயகமாகும்.

சீதை சிறைபிடிக்கப்பட்ட இடம், அசோக வனம், இன்று நுவரெலியா மாவட்டத்தில் சீதா எலியா என்று அழைக்கப்படுகிறது. பெரும் போருக்குப் பிறகு விபீஷணன் முடிசூட்டப்பட்ட இடமாக களனி கோயிலாக அடையாளம் காணப்படுகிறது. சிலாவத்தில், முனேஸ்வரம் மற்றும் மானாவாரி கோயில்கள் உள்ளன. அங்கு இராமர் போரிலான எந்த பாவங்களிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்ள பிரார்த்தனை செய்ததாகக் கூறப்படுகிறது. லக்ஷ்மணனை குணப்படுத்த ஹனுமான் சுமந்து சென்ற சஞ்சீவனி மலையின் ஒரு பகுதியாக ருமாஸ்ஸலா நம்பப்படுகிறது. சீதையின் தூய்மையை நிரூபிக்க தீயால் துன்புறுத்தப்பட்ட இடம் திவுரும்பொல என்று நம்பப்படுகிறது. இந்த இடங்கள் மற்றும் இன்னும் பல, இந்த மாபெரும் காவியத்துடன் எமது நிலம் பகிர்ந்து கொள்ளும் ஆழமான தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த நிகழ்வுகள் பல்வேறு கலாசார கற்றலுக்கான முக்கியமான தளங்களாகும். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கலாசார மற்றும் பாரம்பரிய உறவுகளை வலுப்படுத்துவதில் அவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்தப் பகிரப்பட்ட மரபை நாம் கொண்டாடும் வேளையில், அதைப் பாதுகாப்பதிலும் நாம் உறுதியளிக்க வேண்டும். இந்த பண்டைய தளங்களைப் பாதுகாப்பதிலும் கலாசார சுற்றுலாவை மேம்படுத்துவதிலும் அனைவரும், குறிப்பாக எமது இளைஞர்கள் தீவிரமாகப் பங்கேற்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவ்வாறு செய்வதன் மூலம், எமது கடந்த காலத்தை மதிக்க மட்டுமல்லாமல், எதிர்வரும் தலைமுறைகளுக்கு எமது நாடுகளுக்கு இடையிலான பிணைப்புகளையும் வலுப்படுத்துவதற்கும் வாய்ப்பாக அமைகின்றது - என்றார்.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் கலந்துகொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## 500 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் இவ்வருடம் மட்டும் தற்காலிகமாக முடக்கம்!

கொழும்பு, செப். 16

2025 ஆம் ஆண்டின், இதுவரையான காலப்பகுதியில், சுமார் 500 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் தற்காலிக அடிப்படையில் முடக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பாதாள உலகக்குழு உறுப்பினர்களுடையவை எனச் சந்தேகிக்கப்படும் சொத்துக்களே அதிகளவில் முடக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

முடக்கப்பட்ட சொத்துக்களில் சில அரசியல்வாதிகளின் சொத்துக்களும் அடங்குவதாகவும் எனவும் அமைச்சர் கூறினார்.

அண்மையில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட குற்றச் செயல்களின் ஊடாக ஈட்டப்பட்ட சொத்துக்களை முடக்கும் சட்டத்தின் அடிப்படையில், இந்த சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால குறிப்பிட்டார். (அ)

# மாகாண சபைத் தேர்தல் குறித்து அனைத்து கட்சிகளுடனும் பேச்சு!

### அரச தரப்பு அறிவிப்பு



கொழும்பு, செப். 16

**மாகாணசபைத் தேர்தல் குறித்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளுடன் எதிர்வரும் மாதத்தில் ஆரம்பக்கட்ட பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.**

அதன்படி, சகல தரப்பினரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வந்தால் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த முடியும் என மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொது நிர்வாக அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்து வினவியபோது அவர் இதனைத் கூறினார்.

மாகாண சபைகள் மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல், அரச அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுவது ஜனநாயகத்துக்குப் பொருத்தமற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஆகவே, மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தவேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாகவுள்ளது. எனினும், மாகாண சபைத் தேர்தலைப் பழைய தேர்தல் முறையில் நடத்துவதா அல்லது புதிய முறையில் நடத்துவதா என்பதே தற்போதுள்ள பிரச்னை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுவந்தாலும் தேர்தலை நடத்தும் திகதியை நிச்சயமாகக் குறிப்பிட முடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் காணப்படும் சட்ட சிக்கலுக்குத் தீர்வு காணப்பட்டதன் பின்னர் தாமதமில்லாமல் மாகாண சபைத் தேர்தலை நிச்சயம் நடத்த முடியும் என்றும் அமைச்சர் சந்தன அபேரத்ன தெரிவித்தார். (அ)

# நேபாளத்தின் நிலை இலங்கைக்கு ஏற்படாமல் தடுத்தவர் ரணில்தான்!

### கூறுகிறார் வஜிர அபேவர்த்தன

கொழும்பு, செப். 16

நேபாளத்தின் நிலைக்குச் செல்ல இருந்த எமது நாட்டை, அந்த நிலைமையில் இருந்து பாதுகாத்து சரியான பாதையில் கொண்டு சென்றமைக்காக ஒட்டுமொத்த தேசமும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதன் கௌரவத்தை வழங்கவேண்டும். மக்களின் உள்ளத்தில் பொறாமை மற்றும் வெறுப்பை விதைத்து இலங்கைக்கு எந்த நன்மையையும் ஏற்படுத்திக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நாட்டின் தற்போதை அரசியல் நிலைமை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நேபாளத்தில் கடந்த வாரம் இடம்பெற்ற துயரமான நிலைமை தொடர்பில் எங்களுக்கு தெரியும். அதேபோன்றதொரு சம்பவமே கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் எமது நாட்டிலும் இடம்பெற்றது. அந்த நிலைமை தீவிர நிலைக்கு திரும்பும்போது, எமது நாட்டின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க, தனது வீடு எரிக்கப்பட்ட பின்னரும், அவர் மற்றவர்களின் வீடுகள் எரிக்கப்படுவதை நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொண்டார்.

அதனால் நேபாளத்தின் நிலைமைக்கு செல்ல இருந்த எமது நாட்டை, அந்த நிலைமையில் இருந்து பாதுகாத்து, சரியான பாதையில் கொண்டு சென்ற ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒட்டுமொத்த தேசமும் அதன் கௌரவத்தை வழங்கவேண்டும். பிரச்னைகள் ஏற்படுவது ஜனநாயக சமூகம் ஒன்றின் சிறப்பம்சமாகும். அவற்றை கட்டுப்படுத்துவதும் ஜனநாயக சமூகமொன்றின் சிறப்பம்சமாகும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

## 2029 இற்குள் 50 பல்நோக்கு போக்குவரத்து நிலையங்களை உருவாக்குவதே இலக்கு!

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க



கொழும்பு, செப். 16

2029 ஆம் ஆண்டுக்குள் குறைந்தது 50 பல்நோக்கு போக்குவரத்து நிலையங்களை நிறுவ அமைச்சு எதிர்பார்க்கிறது என்று போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், 2026 ஆம் ஆண்டுக்குள் கொழும்பில் 15 பல்நோக்கு போக்குவரத்து நிலையங்களை நிறுவுவதற் கான திட்டங்கள் நடைபெற்று வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

புறக்கோட்டையில் உள்ள கொழும்பு மத்திய பஸ் நிலையத்தின் நவீனமயமாக்கல் பணிகளைத் தொடங்கி வைக்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே போக்குவரத்து அமைச்சர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

பஸ், ரயில் மற்றும் ரக்ஸி ஆகியவற்றை ஒரே இடத்தில் பெறக்கூடிய வகையில் பல்வகை போக்குவரத்து மையங்கள் கட்டமைக்கப்படும் என்றும் அவர் விளக்கினார்.

கொழும்பு உட்பட மேலும் பல பஸ் நிலையங்களை மேம்படுத்துவதே அமைச்சின் நோக்கம் என்று அமைச்சர் ரத்நாயக்க மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் நேற்று இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையம் 'கிளின் சிறீலங்கா' தேசிய திட்டத்தின் கீழ் ரூ. 425 மில்லியன் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்டு வருகிறது. இது 08 மாதங்களில் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## 1000 வாகனங்கள் துறைமுகத்தில்!

கொழும்பு, செப். 16

மூன்றாம் நாடுகள் வழியாக இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 1,000 வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள தேக்க நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

நிதி அமைச்சு, இறக்குமதி மற்றும் ஏற்றுமதித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் மற்றும் சட்டமா அதிபர் பிரதிநிதிகள் இந்த வாரம், இது தொடர்பில் நீதிமன்றத்தில் முன்மொழிவுகளைச் சமர்ப்பிப்பார்கள்.

முன்னதாக, குறைந்த வரிகளைச் செலுத்தும் முயற்சியில் எல்லை தாண்டிய கடன் கடிதங்கள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட நிலையில், குறித்த வாகனங்கள் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக துறைமுகத்திலேயே உள்ளன.

இதனையடுத்து, குறித்த வாகனங்களை அவற்றின் சொந்த நாட்டுக்கு மீண்டும் ஏற்றுமதி செய்வதே ஆரம்பத் திட்டமாக இருந்தது.

எனினும், அது உலக வர்த்தக அமைப்பு மற்றும் சுங்கத் திணைக்களத்துக்கு இடையிலான மதிப்பீட்டு ஒப்பந்தத்தை மீறுவதாக இருந்ததால் இந்த நடவடிக்கை கைவிடப்பட்டது.

இந்த நிலையில், ஆறு இறக்குமதியாளர்கள் தங்கள் வாகனங்களை விடுவிக்க மாவட்ட நீதிமன்றத்திடம் நிவாரணம் கோரியுள்ளனர்.

இந்த ஆண்டு பெப்ரவரி 1 ஆம் முதலாம் திகதியன்று வாகன இறக்குமதி தளர்த்தப்பட்டதிலிருந்து, சுமார் 213,500 வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. இதில் உந்துருளிகளும் அடங்கும்.

இந்த இறக்குமதிகளின் மொத்த மதிப்பு 314 பில்லியன் ரூபாய்கள் ஆகும்.

அதே நேரத்தில் வாகனங்களிலிருந்து கிடைத்த மொத்த வரி வருவாய் 446.84 பில்லியன்களாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மகிந்தவுக்கு வழங்கிய சலுகைகள் நீக்கப்பட்டமை பொருத்தமானதல்ல!

கொழும்பு, செப். 16

நாட்டின் முன்னேற்றத்துக்கா்க எவ்விதமான வேலைத் திட்டங்களையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான சலுகைகளை நீக்கியமை பொருத்தமானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் கையாள முடியாத பிரச்னைகளில் கவனம் செலுத்துவதாகவும் நளின் பண்டார குறிப்பிட்டார்.

ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கம் அளித்த வாக்குறுதிகளுக்கும் அவை நிறைவேற்றப்பட்டவற்றுக்கும் இடையேயான இடைவெளி என்பது வானுக்கும் பூமிக்கும் இடையிலான இடைவெளி போல் உள்ளதாக நளின் பண்டார குறிப்பிட்டார்.

ஜனாதிபதிக்கு குறிப்பிடத்தக்க நேரத்தை வழங்கியும் பெரிதளவிலான செயற்பாடுகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை என அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த கொழும்பில் உள்ள விஜேராம இல்லத்தில் இருந்து வெளியேறியமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த நளின் பண்டார, முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சில சலுகைகள், கௌரவங்கள் மற்றும் பாதுகாப்பை வழங்க அரசாங்கங்களுக்குப் பொறுப்பு உள்ளது என்று கூறினார்.

இருப்பினும், சில தலைவர்கள் அல்லது முன்னாள் ஜனாதிபதிகள் இந்த வசதிகளைத் தவறாகப் பயன்படுத்தினால், அது முற்றிலும் தவறு என நளின் பண்டார சுட்டிக்காட்டினார்.

ஆனால் குறைந்தபட்ச சலுகைகளை வழங்குவது ஏற்றுக்கொள்ளத்தக்கது எனவும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கான சலுகைகளை நீக்கியமை பொருத்தமானதல்ல எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## பேருந்துகளின் கட்டாய தர நிலை செயல்பாடுகளுக்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, செப். 16

நீண்ட தூர சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தும் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் அடிப்படைத் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதைக் கட்டாயமாக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கைக்குப் பேருந்து சங்கங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

முறையான ஆய்வுக்குப் பிறகே அரசாங்கம் இத்தகைய முடிவுகளை எடுக்கவேண்டும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

அத்துடன், அரசாங்கம் உரிய வழிமுறைகள் இல்லாமல் திட்டத்தைச் செயற்படுத்தினால், எதிர்காலத்தில் பேருந்து சேவை நிறுத்தத்தில் ஈடுபடக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org